பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 26 | 11-08-94 | வியாழக்கிழமை | ஓசை 174

## நல்லூர் உற்சவ பாதுகாப்பு ஒழுங்கு காவல்துறையினரால் அறிவிப்பு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கீழ்காணும் வீதிகள் பின்வரும் சந்திகளில் தடைசெய்யப்பட்டிருக்கும். இத் தடை 1994-08-12-ந் திகதியிலிருந்து 1994-09-07-ந் திகதி வரை தினமும் காலை 5-00 மணியிலிருந்துஇரவு 7-00 மணி வரை நடைமுறையில் இருக்கும் என தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர். அவ் வீதித்தடைகளின்விபரம் பின்வருமாறு, 1. யாழ்நகரிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வீதியில் ஆனைப்பந்திச் சந்தி. (3 ஆம் பக்கம் பார்க்க)





நல்லூர் பகுதியில் நேற்று கேணல் கிட்டுநினைவாக அமைக்கப்பட்ட சிறுவர்பூங்காவை அவரது தாயார் திறந்து வைப்பதனையும், கேணல் கிட்டுவின் சிலைக்கு அவர் மாலை அணிவிப்பதனையும் முதல் இரு படங்களிலும் அடுத்த படத்தில் கேணல் கிட்டுவின் சிலைக்கு அவரது மனைவி மாலை அணிவிப்பதனையும் காணலாம்

# புதிய அரசும் யுத்தத்தை திணித்தால்

# தமிழீழம் உருவாவதை தவிர்க்க இயலாது

# தளபதி கேணல் கிட்டு சிறுவர் பூங்கா திறப்பு விழாவில் அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

தேர்தலின் பின் வரப்போகும் சிங்கள அரசு யுத்தத்தை தமிழர் மீது கட்டவிழ்த்துவிட்டு இனவாதக் கொள்கைகளைக் கடைப்பிடிக்குமானால் அது நிச்சயமாக தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராக மாறும். அப்போரில் நிச்சயம் தமிழர் வெற்றி பெறுவார்கள் என்பது ஒருவரலாற்று உண்மையாகிவிடும். அத்தோடு இதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர்கள் சிங்களவர் என்பதும் வரலாறு கூறும். இவ்வாறு நேற்று மாலை இடம்பெற்ற கேணல் கிட்டு சிறுவர் பூங்கா திறப்பு விழாவில் உரையாற்றிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

''சங்கிலிய மன்னனின் காலகட்டத்தில் எமது தேசத்தின் இறைமை அஸ்தமித்தது. அரசுரிமை அன்னியரால் பறிக்கப்பட்டது 400 ஆண்டுகளுக்குப் பின் யாழ்ப்பாண மண்ணை மீட்டு யாழ்ப்பாணத்தில் தமிழர்களின் ஆட்சியை நிறுவி எமது கட்டுப்பாட்டு பிரதேசமாக கொண்டு வந்த கேணல் கிட்டுவின் சிலை உள்ளது. ஈழத்தின் அஸ்தமனத்தின் இறுதியாக இருந்த சங்கிலிய மன்னனின் சிலையும் புதிய யுகத்தின் உதயமாக கிட்டுவின் சிலையுமாக இரு சின்னங்கள் இப் பூங்காவை சித்தரிக்கின்றன.

கிட்டுவின் யுகம் ஒரு காலத்தின் பதிவு என தலைவர் பிரபாகரன் கூறியுள்ளார். கிட்டு மனித விடுதலையை ஓர் ஆன்மீக தேடுதலாகப் பார்த்தார். விடுதலை என்றால் சமூக, பொருளாதார அரசியல் ரீதியான விடுதலை மட்டுமல்ல. அகரீதியான விடுதலை பற்றியும் அவர் சிந்தித்துள்ளார். 1989- இல் இந்தியாவில் வீட்டுக் காவலில் கிட்டு வைக்கப்பட்டிருந்தார். அப்போது தமிழீழத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கேணல் கிட்டு சிறுவர் பூங்கா திறப்பு விழாவிற்கு ஆயிரக்கணக்கில் மக்கள்

(யாழ்ப்பாணம்)

வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு அவர்களின் நினைவான நல்லூர் பகுதியில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா நேற்று மாலை உணர்வெழுச்சியுடன் திறந்து வைக்கப்பட்டது.

மங்கள இசை முழங்க முதலில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் ஈகச்சுடரை ஏற்றி வைத்தார்.

சிறுவர் பூங்காவை கிட்டு அவர்களின் அன்னையார் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

பின்னர் கேணல் கிட்டு அவர்களின் உருவச் சிலையை அவர்களின் மனைவி சிந்தியா திரைநீக்கம் செய்து வைத்தார். இதன்பின்னர் சிலைக்கு அவர் மாலை அணிவித்தார்.

பின்பு, கிட்டு அவர்களின் சிலைக்கு சகோதரர் காந்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பூங்காவை நிர்மாணித்த கலைஞர்களுக்கு கௌரவம்

(யாழ்ப்பாணம்)

தளபதி கேணல் கிட்டு சிறுவர் பூங்காவினை திறம்பட வடிவமைத்து நிர்மாணித்துத் தந்த கலைஞர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்ட நிகழ்வு நேற்றையதினம் இடம்பெற்றது,

கேணல் கிட்டு சிறுவர் பூங்கா திறப்பு விழா நிகழ்வில் நடைபெற்ற நினைவுரைகளைத் தொடர்ந்து இக்கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்

இதன்போது பூங்காவினை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று மூடப்பட்டிருக்கும்

அனைத்து அவசர அனுமதி வழங்கும் செயலகங்களும், அனுமதிக்கான விசாரணைச் செயலகங்களும், அலுவலர்களுக்கான அனுமதி வழங்கும் செயலகங்களும், விசாரணைப் பகுதிச் செயலகமும், மோட்டார் ஊர்திகளுக்கான 94-ஆம் ஆண்டு வரி அட்டை வழங்குவதற்கென விசேடமாக இயங்கி வரும் செயலகங்களும், இன்று திறக்கப்படமாட்டாது என்பதையும், கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகம் திறந்திருக்கும் என்பதையும் பொது மக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர்.

# அராலி துறையில் அதிரடி மூன்று இராணுவத்தினர்பலி

## இரு சடலங்கள் கைப்பற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

அராலித்துறைப் பகுதியில் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கென பதுங்கியிருந்த இரண்டு இராணுவ அணிகள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பிஓடிவிட்டனர்.

அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதல் மூன்று நிமிட நேரம் மட்டுமே நீடித்தது. இத்தாக்குதலின்போது கொல்லப்பட்ட இரண்டு இராணுவத்தினரின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)

அராலித்துறைப் பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

★ 203 பிஸ்ரல் — 01
★ அதற்குரிய ஷெல் — 06
★ ரி. 56 - 1 ரகத்துப்பாக்கி — 02
★ அதற்குரிய ரவைக்கூடுகள் — 06
★ ரி-81 - 1 ரக துப்பாக்கி — 02
★ பராலைட் — 01
★ நடுத்தர ரவைகள் — 306
★ கிற்பாக் — 01
★ ஏ.கே. கோல்சர் — 02
★ ஸ்கோப் — 01
★ ஸ்ரெயினர் — 01
★ தொப்பி — 01
★ றெயின்கோட் — 01

என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

# கற்பிட்டி பகுதியிலிருந்து சிங்களவர்வெளியேற்றம்

## மீனவர் காணாமற்போனதன் எதிரொலி

(கொழும்பு)

கற்பிட்டிவெல்ல என்னும் தீவிற்கு அண்மையில் மீன்பிடியில் ஈடுபட்ட 19 மீனவர்கள் காணாமற்போனதையடுத்து புத்தளம் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் வெளியேறிக் கொண்டிருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புத்தளம் கடலில் அதிகரிக்கப்பட்ட கடற்படை ரோந்து நடவடிக்கைகளாலும் புத்தளம் பகுதி தீவுகளிலிருந்து நூற்றுக்கணக்கான சிங்கள மீனவர்கள் வெளியேறுவதை தடுக்கமுடியாதுள்ளதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதே சமயம் கடற்புலிகளின் சிறிய குழுவொன்று வடமேல் மாகாணத்தில் உள்ள அரச மீன்பிடித்துறையை முறியடிப்பதற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா பிரசாரம்

(கொழும்பு)

பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனைக்கு செவிமடுக்காது தொடர்ந்து மக்கள் முன்சென்று தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வதே தனது நோக்கம் என சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்,

தொடந்து சகல தேர்தல் பிரசார கூட்டங்களுக்கும் தான்சமுகம் அளிக்கப் போவதாகவும் தனக்கு ஏற்பட்டுள்ள கொலை மிரட்டலுக்கு மத்தியில் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதே தனது நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

# வரி விளம்பரம்

## ஆட்கள் தேவை

அரியாலை புஸ்பா களஞ்சியத்திற்கு பற்றுச்சீட்டுப் போடுவதற்கும் கணக்குப் பதிவதற்கும் அனுபவமுள்ள பெண் ஒருவர் தேவை பல சரக்கு கடையில் அனுபவமுள்ள ஆணும் தேவை. தொடர்பு:-புஸ்பா களஞ்சியம், நெடுங்குளம் சந்தி, அரியாலை. (9074)

## விற்பனையாளர் தேவை

இன்று தமிழீழத்தில் அமோகமாக விற்பனையாகும் ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் விற்பனையாளர் தேவை, தகுதியடிப்படையில் சம்பளம், வசதி செய்து கொடுக்கப்படும், ஸ்ரீசச்சிதானந்த களஞ்சியம், ஆசிரம அருகாமை கைதடி. (9068)

## SPOKEN ENGLISH

SPOKEN ENGLISH WITH GRAMMAR கற்பிக்கப்படுகிறது. V. N. KANDASAMY A. I. B. Part I (LONDON) INTER (LONDON) DIP IN ENGLISH 87, திருநெல்வேலி றோட் (றயில் கடவைக்குச் சமீபமாக) கொக்குவில். (9073)

## மானிய விலையில் உரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் உரவகைகள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம் பிள்ளை தெரிவித்தார். (88)

## சைவசமயப் பாட பரீட்சை

(கொழும்புத்துறை)

கொழும்பு விவேகானந்த சபையினரால் அகில இலங்கை ரீதியாக வருடம் தோறும் நடாத்திவரும் அகில இலங்கை சைவசமய பாடப் பரீட்சை இவ் வருடம் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (24)

## விழாக்கால நிகழ்ச்சிகள்

நல்லூர் கந்தசாமி கோவிலின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, எதிர்வரும் பன்னிரண்டாம் திகதி முதல், அடுத்த மாதம் ஆறாம் திகதி

---

யாழ். றோட்டறிக் கழகம்
வறியோருக்கான
கண்சத்திரசிகிச்சை முகாம் -4
நோயாளர்களைத் தெரிவு
செய்வதற்கான
ஆரம்பப் பரிசோதனை

## இணுவில் ஆஸ்பத்திரியில்

எதிர்வரும் ஞாயிறு 14-08-94 காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.

கற்றக் (Cataract) எனப்படும் கண்ணில் பூப்படலம் வளர்ந்துள்ள நோயாளர்கள் காலை 7.30 மணிக்கு முன் இணுவில் ஆஸ்பத்திரியில் சமுகமளிக்கவும்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்
யாழ். றோட்டறிக் கழகம்

(சி-10092)

---

## வீர அஞ்சலிகள்



பிறப்பு: 30 - 07 - 1975

வீரச்சாவு: 02 - 08 - 1994

மேஜர் சேரன் / அசோக்
குணசிங்கம் குணராஜ் (சதன்)

---

## 9-ம் ஆண்டு குருபூஜை



முத்துக்குமாரு
மயில்வாகனம் சுவாமிகள்

ஆனந்தாச்சிரமம் - செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு

தாயின் மடியில் 26. 09. 1913

முருகன் அடியில் 24. 07. 1985

திதி: 1994 08- 12

ஆண்டு ஒன்பது ஆனாலென்ன - உங்கள்
ஆசியும் அருளும் எங்களுக்குண்டு - ஆதலால்
நீங்கள் ஆரம்பித்து வைத்து - வருடம்
ஐம்பத்தி நான்கை கடக்கும் - ஆனந்தாச்சிரமம்
என்னும் அரும் பெரும் கோவிலை - அழியவிடாமல்
அருட்குருவாகிய உங்கள் அருளினாலும் அன்பர்கள்
உதவியாலும் அகந்தை கொள்ளாமல் ஆயிரம்
ஆயிரம் அடியவர்களுக்கு அன்னம் வழங்கி
அன்புடன் பணிந்து அன்னதானப் பணியைச்செய்து
ஆனந்தமான ஆச்சிரமத்தின் பெயரையும்-அத்துடன்
அருட்குருவாகிய உங்களின் பெயரையும்
அழியவிடாமல் ஆயுள் வரை காப்போம்.

(12-8-94) நாளை மதியவேளை நடைபெறும். மகேஸ்வர பூஜையில் அன்பர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

### முக்கிய அறிவித்தல்

ஆச்சிரமத்தின் பெயரையோ அல்லது அங்கு நடைபெறும் அன்னதானப் பணியை காரணம் காட்டியோ யாராவது பொருள் உதவி கேட்டு வந்தால் உதவி செய்ய வேண்டாம் என அன்பர்களை கேட்டுக் கொள்கின்றோம்

---

# நினைவு கூருகின்றோம்...

## 11-08-1994...

1984-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-சுன்னாகம் சிறிலங்கா காவல்நிலையத்தில் பொறிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய,

**சஞ்சீவி** (வைத்திலிங்கம் மகேசநாதன்-வீரமாணிக்க தேவன்துறை-மயிலிட்டி-யாழ்)

**நிக்கி** (வைத்திலிங்கம் நிகேதரன் - ரயில்நிலைய வீதி, சுன்னாகம்-யாழ்)

1985-ம் ஆண்டு யாழ்-தாவடிச்சந்தியில் காவல் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் விழுப்புண்ணடைந்திருந்து யாழ்-மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

**பிடல்** (சர்வானந்தன் சசிக்குமார் - சாள்ஸ் வீதி, கோண்டாவில் மேற்கு-யாழ்)

1987-ம் ஆண்டு சாவகச்சேரி-சங்கத்தானைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**2-ம் லெப். அப்பன்** (வெற்றிவேலு சிவசிறீ-இத்தாவில் - பளை)

**2-ம் லெப். சதீஸ்** (சற்குணநாதன் பிரகலாதன்-உசன், மிருசுவில், கொடிகாமம்-யாழ்)

**கருணா** (செல்லத்துரை தயாகரன்-நாகர்கோவில்வீதி-எழுதுமட்டுவாள் தெற்கு)

**கமல்** (கனகலிங்கம் சிவனேசன் - மீசாலைதெற்கு. சாவகச்சேரி - யாழ்)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். ரகுபதி** (ஆரோக்கியசாமி சாம்சன் மத்தியூஸ்-சந்திஒழுங்கை, மாதகல்-யாழ்)

1990-ம் ஆண்டு சுண்டுக்குளத்தில் சிறிலங்காப் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மதன்** (— — — திருமலை)

மன்னார் - அச்சங்குளம், நானாட்டான் பகுதியில் பாம்பு தீண்டியதில் எமைப்பிரிந்த,

**2-ம் லெப். தான்பரீன்** (செபமாலை ஜேசுதாசன்-தாமரைக்குளம், அடம்பன்-மன்னார்)

1991-ம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண்ணடைந்திருந்து வீரச்சாவெய்திய,

**நடேசன்** (தங்கையா திருச்செல்வம் - 3-ம் வாய்க்கால்-கிளிநொச்சி)

**கப்டன் அன்ராஜ்** (இராமச்சந்திரன் சங்கர் - வட்டக்கண்டல்-மன்னார்)

**துப்பறி** (குணபாலசிங்கம் திருக்குமாரன் - மீசாலை வடக்கு, கொடிகாமம்)

1992-ம் ஆண்டு மணலாறு-அளம்பில் முகாமிலிருந்து வீதித்தடைகளை அகற்றவென வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**முதல்வன்-ஞானவேல்** (தேவராசா சிறீராசா காரைநகர்-யாழ்)

1993-ம் ஆண்டு மட்டு-ஆயித்தியமலை, அரசடிக்கேணியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் சாவைத்தழுவிக்கொண்ட நாட்டுப்பற்றாளரான,

**சிவனேசபிள்ளை** (நாவற்காடு-விழாவெட்டுவான்-மட்டு)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா, இந்தியப் படையினராலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்

வின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, எதிர்வரும் பன்னிரண்டாம் திகதி முதல், அடுத்த மாதம் ஆறாம் திகதி வரை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் தினமும் காலை ஐந்து மணிக்கு திருமுறை வீதி பஜனையும், ஒன்பது மணிக்கு சமயப் பயிற்சி வகுப்பும், மாலை இரண்டு மணிக்கு சமய பேருரையும், தொடர்ந்து கந்தபுராணப் படிப்பும், இசைப்பேருரையும் நடைபெற இருக்கிறது.

---

**மேஜர் சேரன் / அசோக்**
**குணசிங்கம் குணராஜ் (சதன்)**
**மயிலிட்டித்துறை**

பெரும் துயராகும் உன் இழப்பு
வான்வரை உயரும் சோகப்!
பெருகும் விழிநீரோ நிலத்தை
சேறெனவே ஆக்கும்!!

இடம் பெயர்ந்த மயிலிட்டி கடற்தொழிலாளர்,
(9063) ஒருங்கிணைப்புச் சங்கம்

---

ஆச்சிரமத்தின் பெயரையோ அல்லது அங்கு நடைபெறும் அன்னதானப் பணியை காரணம் காட்டியோ யாராவது பொருள் உதவி கேட்டு வந்தால் உதவி செய்ய வேண்டாம் என அன்பர்களை கேட்டுக் கொள்கின்றோம் அத்துடன் அப்பணிக்கு உதவி செய்ய விரும்புவோர்கள் நேரடியாக எங்களுடன் தொடர்பு கொள்ளவும் அல்லது கடித மூலம் தொடர்பு கொண்டால் நாங்கள் நேரில் வந்து உங்களை சந்தித்துக் கொள்வோம்.

இப்படிக்கு
ஆச்சிரம தொண்டர்களுக்காக
ஆனந்தாச்சிரமம், **செ. இராமதாஸ்**
தொண்டைமானாறு. (சி-10045)

---

**சிவனேசபிள்ளை** (நாவற்காடு-விழாவெட்டுவான்-மட்டு)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா, இந்தியப் படையினராலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10086)

---

# நெஞ்சில் நீளும் நினைவுகள்

**10-ம் ஆண்டு**



வீரவேங்கை
**சஞ்சீவி**
(வைத்திலிங்கம் மகேசநாதன்)
பிறப்பு:
**01-07-1960**
வீரச்சாவு:
**11-08-1984**

**6-ம் ஆண்டு**



நாட்டுப்பற்றாளர்
**சோதி**
(வைத்திலிங்கம் பரமநாதன்)
பிறப்பு: **18-02-1949**
இந்திய பரா ராணுவத்தினாலும் தேச விரோதிகளாலும்
சுடப்பட்டுசாவு: **01-10-1988**

**5-ம் ஆண்டு**



**குட்டி**
(வைத்திலிங்கம் தங்கேஸ்வரன்)
பிறப்பு:
**07-03-1952**
கடற்படையால் .தாக்கப்பட்டு
சாவு: **01.02.1989**

**5-ம் ஆண்டு**



கடற்புலி கப்டன்
**நெடுமாறன்**
(வைத்திலிங்கம் கணேசநாதன்)
பிறப்பு:
**17.01 1964**
வீரச்சாவு:
**30.08.1989**

**5-ம் ஆண்டு**



**சிறி**
(சோமசுந்தரம் சிறிதரன்)
பிறப்பு;
**30.10.1944**
இந்திய ராணுவத்தால் தாக்கப்பட்டு சாவு: **25.05.1989**

**3-ம் ஆண்டு**



வீரவேங்கை
**பதுமநிதி**
(சிறிதரன் சுதாசினி)
பிறப்பு:
**04.10.1974**
வீரச்சாவு:
**08-08-1991**

இலட்சியத்தை நோக்கிய உங்கள் பாதச் சுவடுகளைத் தொடர்ந்து நடையிடுவோம்.

தற்போதைய முகவரி:- சிவன் வீதி, உரும்பராய். உங்களின் பணியைத் தொடரும்
(சி-10089) **குடும்பத்தினர்**

வீரமாணிக்கதேவன் துறை, மயிலிட்டித்துறை.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு..**

புகைந்து கொண்டிருக்கும் ஒரு பிரச்சினைக்கு பதிலாக பற்றி எரியும் பல பிரச்சினைகளை புகுத்துவது எப்படி?

- ஆம்ப்ரோஸ் பியர்ஸ்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 11-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## ஒரே கல்லில் இரு மாங்காய் ஐ. தே. க வின் திட்டம்

தேர்தல் வன்முறைகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லுமானால் பொதுத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய சூழ்நிலை வரை அது செல்லலாம் எனத் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா எச்சரிக்கை செய்யும் அளவிற்கு வன்முறைகள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன. ஆனால், இவ் எச்சரிக்கையின் பின்னரும் கூட, தேர்தல் வன்முறைகள் தணிவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

தேர்தல் வன்முறைகள் இவ்வாறாக அதிகரித்துச் செல்லும் அதேவேளை, அரசியல் தலைவர்களுக்கு கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகவும், கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவியும், மேல் மாகாண முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்கா முக்கிய குறி எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து, பொதுஜன ஐக்கிய முன்னணியை சேர்ந்த பலர் பேசியிருப்பினும், இறுதியாக சந்திரிகா குமாரணதுங்கா இது குறித்து தனக்கு நம்பகரமான தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இது பற்றி செய்தியாளர்களுடன் பேசிய அவர் தன்னைக் கொலை செய்வதற்காக அரசசார்பு ஆயுதக் குழுவுடன் பலர் ஒப்பந்தம் செய்திருப்பதாகவும், 14ஆம் திகதிக்கு முன்னர் இதை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

சந்திரிகா குமாரணதுங்காவை, ஐ. தே.கட்சி, தமிழ்க் குழுவான ஈ, பி. டி. பியுடன் இணைந்து தன்னைக் கொல்லத் திட்டமிடுவதாக வெளிப்படையாகக் கூறாது விட்டாலும், ஐ. தே. க. அரசாங்கத்தையே மறைமுகமாகச் சாடியுள்ளார் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை.

இதேசமயம், சந்திரிகாவின் இக் குற்றச்சாட்டுக்கள் எத்துணை நம்பகரமானது என்பதிலும் கேள்வி இல்லாமல் இல்லை. ஏனெனில், இவ்வாறான அறிவிப்புக்களை 'தேர்தல் ஸ்ரண்டாகக்' மேற்கொண்டு அரசியல் ஆதாயம் தேட முற்படும் தலைவர்களும் இல்லாமல்

# தேர்தலில் வென்று ஆட்சி நிறுவியதும் யாழ்ப்பாணம் சென்று பேசுவோம்

## சந்திரிகா குமாரணதுங்க அறிவிப்பு

(கொழும்பு)

நாம் தேர்தலில் வெற்றியீட்டுவது உறுதியாகிவிட்டது. ஆட்சியை நிறுவியதும் யாழ்ப்பாணம் சென்று சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். ஆட்சியில் இருக்கும் வரை இனப்பிரச்சினைக்கு ஐ.தே க தீர்வு எதையும் காணமாட்டாது என்றும், யுத்தத்தையும் நிறுத்தமாட்டாது என்றும், திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

மாத்தறை உயன்வத்தை மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாம் வெற்றிபெறுவது உறுதியாகிவிட்டது. ஆட்சியை நிறுவியதும், யாழ்ப்பாணம் சென்று சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, ஈழம் கோரிக்கை தவிர்ந்த அனைத்து உரிமைகளையும் தமிழ் மக்களுக்கு வழங்கி, யுத்தத்திற்கு நாம் முடிவு கட்டியே தீருவோம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதற்காக எனது கணவர் விஜே குமாரணதுங்கா, யாழ்ப்பாணம் சென்று பேச்சுக்களை நடத்தினார். அவர்மீது பொறாமை கொண்ட சிலர் அவரைச் சுட்டுக்கொன்றனர். இதே ரீதியில் பாடுபட்ட ரஞ்சன்விஜேரத்தினா, லலித் அத்துலத் முதலி போன்றோரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதன் பின்னணியில் யார் இயங்கினார்கள் என்பது இன்னும் மர்மமானதாகவே இருக்கிறது ஆணைக் குழுக்களை நியமித்தனர். இடைநடுவில் அதனையும் கைவிட்டனர். இவைகளுக்கெல்லாம் புலிகளின் மீதே பழியைப் போட்டனர். நாம் ஆட்சி அமைத்ததும் இவற்றை எல்லாம் விசாரணை செய்து கண்டுபிடிப்போம்.

ஐ. தே. க ஆட்சியில் அமர்ந்து 17 வருடம் போய்விட்டது. இனப்பிரச்சினை பூதாகாரமாகி 11 வருடம் கடந்துவிட்டது. இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்தளவு காலமும் போதாமல் போய்விட்டது. இப்போது விற்பனை மூலம் கிடைக்கும் பெருந்தொகை கமிஷன் பணம் கிடைக்கமாட்டாது. இதனால் யுத்தம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. தென் பகுதியிலிருந்து யுத்தத்திற்கு செல்லும் இளைஞர்களின் பிரேதங்கள் வருவதும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். கோடிக்கணக்கான ரூபாய்கள் விரயமாகிக் கொண்டேயிருக்கும்.

நாம் ஆட்சியை ஏற்றதும் பிரச்சினையை நல்லமுறையில் தீர்த்து யுத்தத்தை நிறுத்துவோம்.

ஐ.தே க. ஆட்சிஅமைத்தது முதல் சதா கொலைப்பட்டியல்கள் நீண்டு கொண்டேயிருக்கிறது. அதேபோலஊழல்களும், வீண்விரயங்களும் மலிந்துள்ளன. சூரியகந்தவில் தோண்டிஎடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் பல நீலச்சட்டை, கட்டைக் காற்சட்டை, மஞ்சள் அங்கிகள், சாரங்கள் என்பவற்றுடன் காணப்பட்டன, அவை பழைய எலும்புக் கூடுகள் அல்ல. இவை பழைய எலும்புக் கூடுகள் என்றும் கால்நடைகளின் எலும்புக் கூடுகள் என்றும் ஐ.தே.க. தலைவர்கள் கூறியிருக்கின்றனர்-

அவை பாடசாலை மாணவர்களதும் புத்த பிக்குகளினதும் எலும்புக்கூடுகள் அல்லவா? இவர்களைக் கொலை செய்தமைக்கான பொறுப்புக்களை ஐ தே.க. அரசு தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். இப் பாவம் தான் கொலன்னாவ ஐ தே.க. பிரசார மேடை உடைந்தமைக்கு காரணம் ஆகும். அதே போன்று பல குழிகள் ஐ.தே.க வின் ராஜாங்க அமைச்சர்கள், அமைச்சர்கள், எம். பிக்கள் வீட்டுப் பின்புறங்களிலும் இருக்கும். அவர்களின் வீட்டுப் பின்புறங்களில் இருக்கும் புதைகுழிகளையும் நாம் ஆட்சி அமைத்ததும் தோண்டி எலும்புக்கூடுகளைஎடுப்போம் அவர்களையும், ஊழல் புரிந்தோரையும், லஞ்சம் பெற்றோரையும் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெறச் செய்வோம்.

நமது ஆட்சியில் பத்திரிகைச் சுதந்திரம், எழுத்து, வாசிப்பு சுதந்திரம் மற்றும் அமைப்பு சயம். இதனைத் தெரிந்து கொண்டு அவர்கள் வெறிபிடித்து அலைகின்றனர். அரசியல் அர்த்தம் தெரியாத ஐ. தே. கவினர் கூட்டங்களில் நரிகளைப் போல ஊளையிடுகின்றனர் அவர்களை மனிதர்களாகத் திருத்தி எடுக்க காலம் செல்லத்தான் செய்யும். இந்த நாட்டில் பலர் காணாமற் போயுள்ளனர் அவர்களின் புள்ளி விபரங்களைப் பெற்று காணாமற் போயுள்ளவர்களுக்குப் அநியாயமாக கொலையுண்டவர்களுக்கும் தகுந்த நட்டஈடு கிடைக்கச் செய்வோம். அதே போன்று விவசாயிகள் தற்கொலை செய்யவும் நாம் இடம் அளிக்க மாட்டோம் எனவும் குறிப்பிட்டார்.

ஐ. தே. க. எந்தவொரு நல்ல திட்டத்தையும் அமுல்படுத்தவில்லை. இளைஞர்களை ரயரில் போட்டு எரித்தது தான் அவர்கள் அறிமுகப்படுத்திய திட்டம் ஆகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் எந்தப் பிளவும் கிடையாது. ஐ. தே. க. ஆறு துண்டுகளாகப் பிளவுபட்டுள்ளது. எனது தம்பியார் என்னைப் பற்றி பழி கூறி வருகிறார். நான் அதனைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றார்.

### நல்லூர்

2. கந்தர்மடம் சந்தியிலிருந்து கோவிலுக்குச் செல்லும் வீதியில் அரசடிச்சந்தி.
3. ஆடியபாதம் வீதியிலிருந்து யழ்நகர் நோக்கிச் செல்லும் வீதியில் சிவன் கோவில் சந்தி.
4. பருத்தித்துறை வீதியிலிருந்து யாழ். நகருக்கு வரும் வீதி சங்கிலியன் சிலையுடனும்.

மேற்கூறிய வீதிகள் தடை செய்யப்பட்டிருப்பதால் பின்வரும் வீதிகளில் போக்குவரத்துச் செய்யலாம். அவையாவன,

அ. பருத்தித்துறை - யாழ். வீதிக்குப் பதிலாக கச்சேரி-நல்லூர் வீதி.
ஆ. கோயில் வீதி - யாழ் நகர் நோக்கி இதற்குப் பதிலாக, சிவன் வீதிச் சந்தியால் பலாலி வீதிக்கு.
இ. யாழ்நகர் - பருத்தித்துறை வீதியைப் பாவிப்பவர்கள் ஆனைப்பந்தி சந்தியில் இருந்து நாவலர் வீதி வழியாக சென்று கச்சேரி நல்லூர் வீதியால் செல்லலாம்என தமிழீழ காவல்துறை அறியத்தருகின்றது,

### பொதுமக்களின் பாதுகாப்பு

## கைக்குண்டு வீச்சு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கீழ் தேசிய பட்டியலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரது வீட்டுக்கு நேற்றுமுன்தினமிரவு கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டம் சம்மாந்துறைப் பகுதியில் உள்ள இவரது வீட்டின் ஒரு பகுதி இதனால் பெரும் சேதமடைந்துள்ளது: சம்மாந்துறைப் பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டிருப்பதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர், எனினும் இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

## அரசினால் அறிவிக்கப்பட்ட ஆசிரியர் சம்பள விபரம்

(யாழ்ப்பாணம்)

தற்போது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 01-01-94 முதல் அமுலாக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் ஆசிரியர்களின் சம்பள விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு - 1 | 95,400/- 10×4800 - 1, 43, 000/- |
| இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு - 2 (தரம் - 1) | 74,400/- 7×3000 - 95,000/- |
| இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு - 2 (தரம் - 2) | 49,200/- 15×1560 - 72,600/- |
| இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு - 3 (தரம் - 1) | 42,720/- 12×1200 - 57,120/- |
| இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு - 3 (தரம் - 2) | 35,520/- 10×750 - 2×1200 - 42, 720/- |

தற்போது சேவையிலுள்ள ஆசிரியர்கள் பின்வருமாறு மேற்படி சேவையினுள் உள்வாங்கப்படுவார்கள்.

| | |
|---|---|
| இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு - 3 :- (தரம் - 2) | 1) 10 வருடத்திற்குக் குறைந்த சேவையையுடைய சகல தராதரப் பத்திரமற்ற\|தராதரப்பத்திரம் உள்ள ஆசிரியர்கள். |
| இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு - 3 :- (தரம் - 1) | 1) 10 வருடத்திற்கு மேல் சேவையை உடைய சகல தராதரப்பத்திரமற்ற \|தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்கள் 2) 10 வருடத்திற்கு குறைந்த சேவையையுடைய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். 3) 10வருடத்திற்குக் குறைந்த சேவையையுடைய பட்டப்பின்/கல்விடிப்புளோமாப் பட்டம் பெறாத பட்டதாரிகள். 4) 7 வருடத்திற்குக் குறைந்த பட்டம் 5) 7 வருடத்திற்குக் குறைந்த சேவையையுடைய பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள். 6) 7 வருடத்திற்குக் குறைந்த சேவையை உடைய பட்டப்பின் கல்விடிப்புளோமாப் பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள். |
| இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு - 2 (தரம் - 2) | 1) 10 வருடத்திற்கு மேல் சேவையை உடைய பயிற்றப்பட்டஆசிரியர்கள் 2) 7 வருடத்திற்கு மேற்பட்ட |

ஆதாயம் தேட முற்படும் தலைவர்களும் இல்லாமல் இல்லை.

ஆனால் ஐ. தே. க. இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடமாட்டாது என்று அடித்துக் கூறிவிடக் கூடிய அரசியற் சூழ்நிலையும் இன்று இருப்பதாக இல்லை. ஏனெனில், ஐ. தே. க. தேர்தல் வெற்றிக்கு வன்முறைகளையே ஆயுதமாகப் பாவிக்கத் தொடங்கிப் பல வருடங்கள் கடந்து விட்டன,

ஐ தே. கவின் இவ்வாறான போக்கு 1982லேயே தெரியத் தொடங்கினும் 1988, 1989 தேர்தல்களின் போது வெளிப்படையாகவே வன்முறையை ஐ தே.க. அரசாங்கம் திட்டமிட்டு நடத்தியது, ஆனால்; இதற்கான முழுப் பொறுப்பையும், பழியையும் ஜே. வி. பி. கிளர்ச்சியாளர்கள் ஏற்கவேண்டி வந்தது.

அத்தோடு இம்முறை ஐ. தே. க. இத்தேர்தலில் தோல்வி அடைவது தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாகவே இருக்கும் என அரசியல் அவதானிகள் ஆருடம் கூறுகின்றனர். இந்நிலையில், 17 வருட ஆட்சி அதிகாரம் கைநழுவப்போவதை ஐ. தே. க. அரசியல் வாதிகளினால் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதிலும் சந்தேகமில்லை. இதனை தெளிவுபடுத்துமாப் போன்றே அரசியற் களமும் உள்ளது.

மத்திய அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் என சகல மட்டத்தினரும் தேர்தல் வன்முறையில் ஈடுபடுவதில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ளமுடியும். இந்நிலையில், சந்திரிகா குமாரணதுங்காவின் குற்றச்சாட்டையும் முற்றாக நிராகரிப்பதற்கில்லை.

ஆனால் ஐ. தே. க. புரியும் இத்தேர்தல் வன்முறையின் இறுதிக்கட்டம் தெற்கிலுள்ள தமிழர் மீது திரும்பும் என்பதே அபாயகரமானதாகும். இதற்கு ஏதுவாக முயற்சிகளும் நடைபெற்று வருவதாகவே அவதானிக்க கூடியதாகவுள்ளது. இதன் ஒரு அங்கமாகவே விடுதலைப் புலிகள் கொழும்பினுள் ஊடுருவி உள்ளதாகவும் அவர்கள் அரசியற் தலைவர்கள் மீது தாக்குதலை நடாத்த திட்டமிட்டு வருவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் தெற்கில் எங்காவது பெரிய அளவினதாக தேர்தல் வன்முறை ஏற்படும் பட்சத்தில், தமிழர் மீது பழியைப் போட்டுவிடுதல் சுலபமானதாகும். அத்தோடு, தமிழருக்கு எதிராக வன்முறையைத் திருப்பிவிடுவதன் மூலம் இன அழிப்பிற்கும் இலகுவாக வழிவகுத்து விடக்கூடும். இது ஐ. தே. கவைப் பொறுத்து ஒரு கல்லில் இரண்டு மாங்காய் பறித்ததற்கு ஒப்பானதாகும்.

---

போய்விட்டது. இப்போது ஐ. தே. கவினர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாகக் கூறுகின்றனர். இதனை மக்கள் நம்புவார்களா? ஐ. தே. க அரசாங்கம் பதவியில் இருக்கும் வரை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படமாட்டாது. யுத்தம் நிறுத்தப்படவும்மாட்டாது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை அரசு நிறுத்தினால், ஆயுத

சுதந்திரம் என்பவை வழங்கப்படும். எமது ஆட்சியை எவரும் விமர்சிக்கலாம் இளைஞர்கள் ஆயுதத்தின் மீது நம்பிக்கை வைக்காமல் வாக்குகளின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் எவரையும் நாம் பழிவாங்க மாட்டோம்

இந்த ஆட்சி மக்களின் வாக்குகள் மூலம் எதிர்வரும் 16-ம் திகதி அகற்றப்படுவது நிச்

---

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் அனைவரும் தமது உடமைகளை பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்,

அடியார்களின் நலன்கருதி தமிழீழ காவல்துறையினரின் உற்சவ கால பணிமனையொன்று ஆலயத்தின் முன்னாலுள்ள பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் காவல்துறையினர் அறிவிக்கின்றனர்.

---

# அமைச்சின் அறிவிப்பு சில உண்மைக்குப் புறம்பானது

## தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் சங்கங்களின் சம்மதத்துடன் தீர்மானிக்கப்பட்டபடி சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்ற கல்வி இராஜாங்க அமைச்சு செயலாளர் பத்திரிகை அறிவிப்பு உண்மைக்கு புறம்பானது. ஐக்கிய தேசிய கட்சிக்கு அரசியல் லாபம் தேடும் நோக்குடையது. இவ்வாறு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை ஆசிரிய சேவை திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி உட்பட பல விடயங்களில் முரண்பாடு காணப்படுகிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். ஆசிரிய சங்கங்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது அமைச்சரவை 06 - 10 - 91 முதல் ஆசிரிய சம்பளம் உயர்த்தப்படும் என ஏற்கப்பட்டிருந்தது ஆனால் இப்போது 01 - 01 -94 முதல் தான் சம்பள உயர்வு அமுலாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே சம்பள உயர்வை 06-10-91 திகதியிலிருந்து அமுல்படுத்தும் படி ஆசிரிய சங்கங்கள் தொடர்ந்து போராடும் எனவும் திரு. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

---

## தொழிலாளர் காயம்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் 'றுகுணு' கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருட்களை கரையில் இழுவைப் படகில் வைத்து இறக்கிக் கொண்டிருந்த வேளை மூன்று தொழிலாளர்கள் காயமடைந்தனர். இவர்கள் மூவரும் சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துறைமுகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற இச்சம்பவத்தின் போது கரவெட்டி மேற்கைச் சேர்ந்த அழகன் - ஜெகன் (17), தங்கராசா - இலங்கேஸ்வரன் (24) சிவபாலன் - தில்லைநாதன் (19) ஆகியோரே காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் (யோ)

## ஆங்கில வகுப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் லயன்ஸ் சழகத்தினர் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்காக ஆங்கில வகுப்பினை அடுத்தமாதம் ஆரம்பிக்கவுள்ளனர். (88)

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994 - 08 - 11

### வியாழன் இரவு

8.01- ற்கு சொல்லுங்கள் பார்க்கலாம்

8.10- ற்கு உரை ''முயற்சியே முன்னேற்றத்தின் படிக்கல்''

8.20- ற்கு உழைப்போம் உயர்வோம் ''உப்புச் சிரட்டை'' குறு நாடகம்

8.30- ற்கு செய்திகள்

8.40- ற்கு ஏட்டிலிருந்து-நாடு அழைத்தது என்ற நூலிலிருந்து ''தோழர் ஜெயபாலுக்கு புரட்சி அஞ்சலி'' எனும் கட்டுரையில் சில பகுதிகள்

8.50- ற்கு மலரும் மொட்டுக்கள்

### 1994 - 08 - 12

### வெள்ளி காலை

7.02- ற்கு மாவீரவணக்கம்

7.15- ற்கு விடுதலை கானங்கள்

7.30- ற்கு செய்திகள்

7.35- ற்கு பத்திரிகைச் செய்திகள்

7.40- ற்கு விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம் பெறும்

---

சேவையை உடைய பயிற்றப்பட்ட பட்டதாரிகள்.

3) 7வருடத்திற்கு மேற்பட்ட சேவையையுடைய பட்டப்பின் கல்விடிப்புளோமாப் பட்டம் பெற்ற பட்டதாரிகள்.

இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு - 2 (தரம் - 1)

1) 20 வருடத்திற்கு மேற்பட்ட சேவையை உடைய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
2) 17 வருடத்திற்கு மேற்பட்ட சேவையையுடைய பயிற்றப்பட்ட பட்டதாரிகள்.
3) 17 வருடத்திற்கு மேற்பட்ட சேவையையுடைய பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டத்தை உடைய பட்டதாரிகள்.

தற்போது சேவையிலிருக்கும் சகலஆசிரியர்களும் மேற்படி அடிப்படையில் முதல் கட்ட உள்வாங்கலின் போது உள்வாங்கப்படுவார்கள். முதல்கட்ட உள்வாங்கலின் போது தற்போது சேவையிலிருக்கும் எந்த ஆசிரியரும் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு - 1 க்குள் உள்வாங்கப்பட மாட்டார்கள்.

முதல் கட்ட உள்வாங்கலின் பின் 22 வருட சேவை உடைய பயிற்றப்பட்ட பட்டதாரிகள், 22 வருடங்களுக்கு மேல் சேவை உடைய பட்டப்பின் டிப்ளோமாப் பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள், 25 வருடம் சேவை உடைய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மத்தியில் இரு பாடங்களில் போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு ஒரு குறிப்பிட்ட தொகையினர் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1- க்கு தெரிவுசெய்யப்படுவர்.

முதல் நியமனம் பெறும் பட்டதாரிகளும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 3 தரம் 1- ல் நியமிக்கப்படுகின்ற போதும், அவர்களின் ஆரம்பச் சம்பளம் வித்தியாசமானதாகவே இருக்கும். பட்டதாரிகள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை விட சில படிகள் உயர்ந்த சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படுவார்கள்.

---

# தமிழீழ கல்வி பொதுதேர்வு நாளை ஆரம்பமாகிறது

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் கடந்த இரண்டு வருடங்களாக நடாத்தப்பட்டுவரும் மேற்படி தேர்வின் இவ்வாண்டிற்குரிய தேர்வு நாளை ஆரம்பமாகவுள்ளது- இத் தேர்வு சார்பாக, விஞ்ஞானம், தொழில் நுட்பப் பாடங்கள், கவின்கலைப் பாடங்களுக்கான செயல் முறைத் தேர்வுகள் யாவும் சென்ற மாதம் சிறப்பாக நடந்தேறியுள்ளன.

இவ்வாண்டு நடைபெறும் எழுத்துத் தேர்விற்குத் தமிழீழம் முழுவதும் 15,350 மாணவர்கள் தோற்றவுள்ளனர். எல்லாமாக 137 தேர்வு நிலையங்களில் இத் தேர்வு நடைபெறவுள்ளது. சென்ற ஆண்டைப்போல் மாவட்ட, தேசிய மட்டங்களில் உச்சப் புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு இவ்வாண்டும் தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

# பிரதிஅமைச்சர் ஆதரவாளர் பொலிசாரை நோக்கி சூடு

ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமைச்சரவையில் பிரதி அமைச்சராக இருந்த ஒருவரின் ஆதரவாளர்கள் பொலிசாரை மிரட்ட துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது,

மேற்படி ஆதரவாளர்கள் பகிரங்க இடங்களில் சுவரொட்டி ஒட்டிக்கொண்டிருந்தார்கள் எனவும் அவர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் வாகனமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது,

முன்னாள் பிரதி அமைச்சர் அவர்களை விடுவிக்க உயர் மட்ட முயற்சிகள் செய்த போதிலும் அது பலனளிக்கவில்லை, கைதானவர்கள் தமிழர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது,


## நல்லைக் குமரன் மலர் 1994

நல்லைக் குமரன் மலர் - 1994 வெளியீட்டு விழா வைபவம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் 16-08-94-ம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சிரமத்திற்கு மன்னிப்புக் கோருகிறோம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
10-08-1994

சைவசமய விவகாரக்குழு
யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்.

(சி-10093)



கீழ் குறிப்பிடப்படும் பொருள்களுக்கும் வேலைகளுக்குமான விண்ணப்பங்களும் கூறுவிலைகளும் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களும் கூறுவிலைகளும் போதிய விவரங்களுடன் பதிவுத் தபால் மூலம் 31 - 8 - 94க்கு முன் சங்க முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

1. தேவை

   1. இசுசு 24/4364 லொறிக்கான உடற்கோப்பு (LORRY BODY)

      சங்கத்தின் இசுசு லொறிக்குப் பொருத்துவதற்குப் பாவித்த நல்ல நிலையில் உள்ள உடற்கோப்புத் தேவை.

   2. எம்.எவ்.135 உழவு யந்திரத்திற்கான மோட்டர்

      புதிய அல்லது பாவிக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ள மோட்டர் தேவை.

2. கூறுவிலை

   இரும்புக் கதிரைகள் ஒட்டுவதற்கான கூறுவிலை

   1000க்கு மேற்பட்ட இரும்புக் கதிரைகள் ஒட்டுவதற்குக் கூறுவிலை கோரப்படுகின்றது. ஒட்டு ஒன்றுக்குக் கோரப்படும் கூறுவிலையைக் குறிப்பிடவேண்டும். சங்க வேலை நேரங்களில் கதிரைகளை நேரில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி.

(சி-10088)


புதிய

தில் இந்தியப்படை - விடுதலைப் புலிகள் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

## இரகசியப் பேச்சிற்கு இந்தியா முயன்றது

அப்போது நானும்பாரியாரும் இந்தியா சென்று பங்களூர் நகரில் தலைமறைவாக இருக்கின்றோம். அப்போது இந்தியா இரகசியமாக ஒரு பேச்சு நடத்த முயன்றது. இரண்டு வருடமாகியும் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியவில்லை. இந்திய இராணுவத்திற்கு இது பெரிய இழுக்கு. சிறிய கெரில்லா இயக்கத்தை ஒரு லட்சம் இந்தியப் படைகளால் அழிக்க முடியவில்லை என்ற அவமானத்தை இந்தியா எதிர்நோக்கியிருந்த நேரம். அச்சமயம் விடுதலைப் புலிகளுடன் இரகசியமாக பேச்சு நடத்தி எப்படியாயினும் அப்போரை முடிவுக்கு கொண்டு வந்து விடுதலைப் புலிகள் இந்தியாவிடம் சரணடைந்துவிட்டார்கள் என்ற சூழ் நிலையை உருவாக்கி தான் தப்பிக்க இந்தியா விரும்பியது. இந்நோக்கத்துடன் இந்திய அரசு இரகசியப் பேச்சை சென்னையில் ஆரம்பித்தது கிட்டுவுடன் பேச்சுக்கள் நடந்தது. பேச்சை நடத்தியவர்கள் இந்திய புலனாய்வுத் துறையின் முக்கிய அதிகாரிகள், அப்போது கிட்டு என்னுடன் தொடர்புகொள்ள வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் நான் வெளியே வந்தால் கஷ்டம். நான் இந்தியாவில் இருப்பது இந்திய அரசுக்கு அப்போது தெரியாது இரகசியமாக கிட்டுவை சந்திக்க வேண்டும். கிட்டுவுக்கு நாலா புறமும் பொலிஸ் இருக்கிறது. நான் பொலிசின் கண்ணில் படாமல் சந்திக்க வேண்டும். பங்களூரிலிருந்து சென்னை சென்றேன். கிட்டுவின் வீட்டுக்கு சென்றால் அங்கு பொலிசார் ஒருவரையும் காணவில்லை. வீட்டின் பின்புறமாக நான் சுவர்களை கடக்க வேண்டும். நான் பாய்ந்து கடந்து வந்தேன். கிட்டு என்னை மேல்மாடிக்கு அழைத்துச் சென்று உரையாடினார். நான் அங்கு வீட்டை சுற்றி பொலிஸ் காவலை எடுத்துவிட்டார்களா என கிட்டுவை கேட்டேன் அதற்கு கிட்டு,

பொலிஸ் வீட்டிற்குள் தான் இருக்கின்றது. நான் வரும் நேரத்தை அறிந்துவிட்டு வீடியோவில் எம். ஜி. ஆரின் படத்தை போட்டிருக்கிறார். பொலிஸ்காரர் அப்படத்தை பார்க்க உள்ளே வந்தமர்ந்துவிட்டிருந்தனர். வெளியே எவரும் இல்லை. ஒரிருவர்

பேச்சுகளின்போது 50 கோடி ரூபாவை எமக்கு தருவதாகவும் பதிலாக வைத்திருக்கும் 700 ஆயுதங்களை தரும்படி கேட்டது. நாம் அதற்கு 50 கோடி ரூபாவினை உடனடியாக தரும்படியும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அதனை நாம் வெளிநாட்டில் உள்ள எமது வங்கிக்கணக்கில் வைப்பிலிட்டபின்னர் ஆயுதங்களை ஒப்படைக்கிறோம்.

ஆனால் இதனை சரணாகதியடைந்ததாகக் கருதக் கூடாது- போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு நாம் அதனை வழங்குவோம் என்றோம்- அதற்கு இந்திய அரசு மறுத்து விட்டது- பேச்சுகள் முறிந்தவுடன் கிட்டு கைது செய்யப்பட்டார்-

## தூங்கி வழிந்த டி. பி.

இறுதியாக கொழும்பில் நாம் பிரேமதாசா அரசுடன் பேச்சு நடத்திக் கொண்டிருந்த போது கிட்டு அங்கு வந்திருந்தார்- ஒரு கூட்டத்திற்கு நாம் சென்றிருந்தோம் அமைச்சர்களை அங்கு சந்தித்தோம்- அப்போது ஒரு வயோதிபர் ஒருவர் அமைச்சர்களுடன் வந்தமர்ந்திருந்தார்- வேட்டியுடன் இருந்த அவர் மூலையில் நித்திரை செய்துகொண்டிருந்தார்- அப்போது கிட்டு என்னிடம் யார் அவர் கூட்டத்திற்கு வந்து நித்திரை கொள்கிறார் என்று அவரைக் காட்டி கேட்டார்- எனக்கும் அவரை தெரியாது- அருகிலிருந்த அமைச்சர் ஹமீத்திடம் இவர் யார் என்று கேட்டேன் அவர் தான் எங்களின் பிரதமர் டிங்கிரி பண்டா என்றார்- இப் படியான டிங்கிரி பண்டா இன்று யுத்தம் பற்றி பேசுகிறது-

## தேர்தல் தீர்க்கதரிசனம் கடினம்

தேர்தல் வரப்போகின்றது. அரசியலில் தீர்க்க தரிசனம் கூறுவது கடினம். சிங்களக் கட்சிகள் எவையும் தமிழ் மக்களுக்கென சரியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவில்லை. ஐ- தே- க- பகிரங்கமாக தனது இனவாத நிலைப்பாட்டை கூறுகின்றது. வடக்கு கிழக்கை இணைக்க முடியாது எனக் கூறுகிறது. ஐ. தே- க- ஆட்சிக்கு வந்தால் ஒரு யுத்தத்தை நடத்தி வடபகுதியை இராணுவக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதாக ஜனாதிபதியாக கூறுகிறார். சந்திரிகா தான் ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் பேச்சு நடத்துவேன், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிப்பேன் எனக் கூறுகிறார். நல்ல விஷயம்- அதை நாம் வரவேற்கின்

னையை தீர்க்க வேண்டும்- பேச்சிற்கு புலிகள் தயார் போர் நிறுத்தம் செய்து பேச்சு நடத்த தயார் என திரும்பத்திரும்ப கூறிவருகிறோம்- பேச்சு வார்த்தைகளுக்கு நாம் தயார்- சமாதானக் கதவுகள் திறந்தேயுள்ளன என பலமுறை கூறியுள்ளோம்- இன்றுவரை சமாதானக் கதவுகளை மூடியதாக நாம் கூறவில்லை. இனி வரும் அரசு சந்திரிகாவின் அரசாக இருந்தாலென்ன டிங்கிரியின் அரசாக இருந்தாலென்ன எம்முடன் பேச்சு நடத்த விரும்பினால் நாம் அதற்குதயார் யுத்த நிறுத்தம் செய்ய விரும்பினால் நாம் அதற்கு தயார்- ஆனால் எப்படியான அரசு வரும் எப்படியான வழிமுறைகள் கையாளப்படப் போகின்றன- சமாதான சூழ்நிலை தோன்றுமா அல்லது யுத்தசூழ்நிலை தோன்றுமா என்பது அவர்களைப் பொறுத்தது. அதாவது யுத்தமா சமாதானமா என்பது சிங்கள அரசியல் தலைமைகள் முடிவு எடுக்க வேண்டிய விடயம்- எம்மைப் பொறுத்தவரை நாம் எம் நிலைப்பாட்டில் தெளிவாக உள்ளோம்- பிரபாகரன் ஒரு கையில் துப்பாக்கியும் மறு கையில் சமாதானப் புறாவும் வைத்துள்ளார்- நாம் சமாதானத்திற்கு தயார்- துப்பாக்கியை நாம் வைத்திருக்கின்றோம்என்றால் அது எமது தற்காப்பிற்காகவே- எந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக சண்டையிடவும் நாம் தயாராக உள்ளோம்- யூ- என் பி- ஆட்சிக்கு வந்தால் நிச்சயம் இராணுவ தீர்வை அது முன்வைக்கும்- ஐ-தே- க- எம்மக்கள்மீது வலிந்து ஒரு யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டால் அதை எதிர்த்து போராடும் சக்தியும் பக்குவமும் விவேகமும் எமக்குண்டு-

## யுத்தமும் தன்னாட்சியும்

யுத்தம் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முயன்றால் சிங்களஅரசுக்கும் சிங்களதேசியத்திற்கும்தான் பெரிய அழிவைகொண்டுவரும்- மிகவிரைவில்அதுஎமது தமிழீழத்தினை பிரகடனப்படுத்துவதாகவே அமைந்துவிடும்- அவர்கள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரித்து தமிழ்மக்களின் சமாதான கயிற்றை அறுத்தெறிந்து இனிவரப்போகும்சிங்கள அரசு யுத்தத்தை தமிழர் மீது கட்டவிழ்த்து விட்டு இனவாத கொள்கையை கடைப்பிடிக்குமானால் அது நிச்சயமாக தமிழரின் தன்னாட்சி உரிமையை பெற்றிடும் ஓர் உரிமைப்போராக, தமிழரின்

# முப்படைகளின் தேடுதலில் 415 தமிழர் கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த வாரம் இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் உதவியுடன் பொலிசார் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது வடக்கு கிழக்கிலிருந்து கொழும்பு வந்திருந்த 415 இளைஞர்கள் கைதாகியுள்ளனர். இவர்களில் யுவதிகளும் அடங்குவர் எனத் தெரியவருகிறது.

கைதானவர்கள் பொலிஸ் நிலையங்களில் வைத்து தனித்தனியாக படம் பிடிக்கப்பட்டு கைவிரல் அடையாளங்களும் எடுக்கப்பட்டன. இவை பின்னர் தேசிய புலனாய்வு பிரிவு கம்பியூட்டர்களில் தேடப்படும் விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களின் விபரங்களுடன் ஒப்பிட்டு பார்க்கப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதேசமயம் அனைத்து விடுதிகள், கடைகள், வீடுகள் என்பவற்றில்அடிக்கடி சோதனை நடத்துமாறு கொழும்பில் உள்ள அனைத்து பொலிஸ்நிலையங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடற்கரும் புலிகள் ஊடுருவலைத் தடுக்க புத்தளம் முதல் வத்தளை வரையிலான கடற்பகுதியில் கடற்படை ரோந்தும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுப் போட்டி

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்படும் மந்துவில் மேற்கு லெப் மரிக்கார் பாடசாலையின் 2- ம் வருட விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1. 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (86)

## கற்பிட்டி

காக புத்தளம் அனுப்பப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த வெள்ளியன்று நடைபெற்ற சம்பவத்தில் நாலரை லட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் காணாமற்போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## அராலி

உடல்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன- பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன- இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை-

கொல்லப்பட்ட இரண்டு இராணுவத்தினரது சடலங்களையும் பெரும் திரளான மக்கள் சென்று பார்வையிட்டனர்-

நேற்றுக்காலை கொழும்புத்துறைப் பகுதியில் மேற்படி கைப்பற்றப்பட்ட இரண்டு இராணுவத்தினரதும் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன- அச் சமயமே பெரும் திரளான மக்கள் முண்டியடித்துக் கொண்டு பார்வையிட்டுச் சென்றனர்.

## பூங்காவை

சிறப்புற வடிவமைத்து நிர்மாணித்த கரம்நிறுவன இயக்குனர் திரு யசோ அவர்களுக்கான கௌரவப்பரிசினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் வழங்கி கௌரவித்தார்

## கேணல்

தாசன் மாலை அணிவித்தார்.

இதன்பிறகு கேணல் கிட்டு அவர்களுடன் வங்கக் கடலில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப் படங்கள் திரை நீக்கம் செய்யப்பட்டு மாலைகள் அணிவிக்கும். நிகழ்வு நடைபெற்றது.

முதலில் லெப். கேணல் குட்டிசிறியின் உருவப் படத்தை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் அவர்கள் திரை நீக்கம் செய்து வைத்து மாலை அணிவித்தார். பிறகு வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெற்றோர்கள் உருவப் படங்களை திரை நீக்கம் செய்து மாலை அணிவித்தனர்.

பின்னர் சங்கிலியன் சிலைக்கு தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்களால் மாலை அணிவிக்கப்பட்டது.

முன்னதாக மாலை 6 45 மணியளவில் மாநகரசபை தீயணைப்பு பிரிவிற்கு முன்பிருந்து பொதுமக்களும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் ஊர்வலமாக பூங்காவை. நோக்கிச் சென்றனர்

'புலிகளின் தாகம் தமிழீழ் தாயகம் என்றே நீ கூறு' என்ற பாடல் நாதஸ்வரத்தில் ஒலிக்க ஊர்வலம் சென்றது-

நேற்று மாலை சம்பிரதாய பூர்வமாக, உணர்வெழுச்சியுடன் திறந்து வைக்கப்பட்ட கேணல் கிட்டு சிறுவர்பூங்கா

கதிரைகளை நேரில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி.

(சி-10088)

## அறிவித்தல்

### தட்டுப்பாடின்றி படச்சுருள் பெற்றுக் கொள்ள....

என்னும் எமது திட்டத்திற்கமைய 20-06-94 வரை பதிவு செய்த வாடிக்கையாளர்களிற்கான படச்சுருள்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

16. 08. 94இற்கு முன்னர் நேரடியாகப் பெற்றுக் கொள்ளவும்.

-நிர்வாகம்

**கலக்சி புகைப்பட சேவை**
யாழ்ப்பாணம்.

(9076)

வாரிவளவு நல்லியக்கச்சபை - காரைநகர்
காரை. மாணவர்களுக்கான

## திருக்குறள் மனனப் போட்டிகள்

சிறுவர் முதல் ஆண்டு ஐந்து வரை

★ 1994-09-17 சனி காலை 8 மணி.
யாழ்ற்ரன் கல்லூரி, வட்டுக்கோட்டை.

★ 1994-09-18 ஞாயிறு காலை 8 மணி
யா/நாவலர் ம.வி. யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு:
**செயலர், 148/10 புகையிரதநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

கல்யாணப் பட்டுப் பிடவைக்கடல் 'திருமாட்டி' ஸ்தாபனத்தினர்
''அணுவைத்துளைத்து ஏழ்கடலைப்புகட்டி குறுகத்தறித்த குறள்'' எனப் போற்றும் திருக்குறள் மனனப் போட்டியில் பங்கு கொள்ளும் காரை மாணவ செல்வங்களை வாழ்த்துகின்றனர்.

**திருமாட்டி (சீமாட்டி)**
(பிடவைக் கடல்)
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(9071)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


பொலிஸ் வீட்டிற்குள் தான் இருக்கின்றது. நான் வரும் நேரத்தை அறிந்துவிட்டு வீடியோவில் எம். ஜி. ஆரின் படத்தை போட்டிருக்கிறார். பொலிஸ்காரர் அப்படத்தை பார்க்க உள்ளே வந்தமர்ந்துவிட்டிருந்தனர். வெளியே எவரும் இல்லை. ஒரிருவர் வெளியே நின்றபோது அவர்களை அழைத்த கிட்டு முதலமைச்சர் எம். ஜி. ஆரின் படம் ஓடுகிறது. அதை பார்க்காவிட்டால் அவர் கோபிக்க மாட்டாரா எனக் கேட்டுள்ளார். அவர்களும் பயந்து படம்பார்க்க உள்ளே வந்துவிட்டனர். இதன் பின்பே அவர் என்னை அழைத்துச் சென்று மேல் மாடியில் வைத்து உரையாடினார். இப்படி பல தடவை நடந்தது

கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதாக ஜனாதிபதியாக கூறுகிறார். சந்திரிகா தான் ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் பேச்சு நடத்துவேன், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிப்பேன் எனக் கூறுகிறார். நல்ல விஷயம்- அதை நாம் வரவேற்கின்றோம்- ஆனால் சந்திரிகா ஆட்சி வருவது கஷ்டமா? ஆட்சிக்கு வந்து புலிகளுடன் நேசக்கரம் நீட்டினால் அதற்கு பின்னால் இனவாததீவிரவாத சக்திகள் பேச்சுகள் நடக்க விடுமா? என்பது கேள்விக் குறியாக உள்ளது-

### பேச்சிற்குப் புலிகள் தயார்

என்றாலும் புலிகளாகிய நாம் பேச்சு மூலம் பிரச்சி

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை முதல்வன்/ஞானவேல்**
(தேவராசா சிறீராசா)
(சிவகாமி அம்மன் கோவிலடி, காரைநகர்)

மலர்வு **27-12-1974** | வீரச்சாவு **11-08-1992**

அலம்பில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதர, சகோதரிகள்.

கமால் லேன்,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம் (9072)

தான கயிற்றை அறுத்தெறிந்து இனிவரப்போகும்சிங்கள அரசு யுத்தத்தை தமிழர் மீது கட்டவிழ்த்து விட்டு இனவாத கொள்கையை கடைப்பிடிக்குமானால் அது நிச்சயமாக தமிழரின் தன்னாட்சி உரிமையை பெற்றிடும் ஓர் உரிமைப்போராக, தமிழரின் சுதந்திரப்போராக, தமிழரின் தனியரசை நிறுவும் ஒரு இலட்சியப் போராக மாறும்- அப்போரில் நிச்சயம் தமிழர் வெற்றி பெறுவர் என்பது ஒரு வரலாற்று உண்மையாகிவிடும். அதனை நாம் பொறுத்திருந்து பார்ப்போம்-

இன்னும் தேர்தலுக்கு நான்கைந்து நாள்தான் உள்ளது- யார் ஆட்சிக்கு வரினும் தமிழரின் தேசிய பிரச்சினையை தீர்க்காமல் இந்த நாட்டில் நிம்மதி இருக்கப்போவதில்லை. சமாதானம் நிலவப் போவதில்லை.

எனவே விடுதலைப் புலிகள் ஒரு புறம் அர்ப்பணிப்புகளுடன், தியாகத்துடன் யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்த போதும் மறுபுறம் சமாதானத்திற்காகவும், பேச்சு வார்த்தைக்காகவும் நேர்மையான, உண்மையான முயற்சிகளை எடுத்து வந்துள்ளனர். இம் முயற்சி எமது தளபதிகள் பலரை உயிரிழக்கச் செய்துள்ளது. திலீபன் முதல் குமரப்பா, புலேந்திரன், கிட்டு வரை பல தளபதிகள் சமாதான முயற்சிக்காக நாம் இழந்துள்ளோம். அன்றுமுதல் இன்றுவரை புலிகள் பேச்சுக்கான சமாதான கதவுகளை திறந்து வைத்துள்ளனர்.

எமது சமாதான முயற்சிகளை நிராகரித்து எம் மக்கள் மீது, மண் மீது படையெடுக்க அரசு முற்படுமானால் அதன் பாரதூரமான விளைவுகள் இனி ஒருபோதும் சிங்கள இனத்துடன் ஒத்துப் போகாது. நாமே எமது தனியரசை அமைத்து தன்னாட்சியுள்ள மக்களாக வாழ்வதை தவிர வேறுவழியில்லை. அரசு சமாதானத்தை விரும்பாது போரை தொடருமானால் தமிழரசை உருவாக்கிய தற்கான சூழ்நிலையை உருவாக்கி தந்தார்கள் என்று சிங்களவர்களை வரலாறு சொல்லும் என்றார்.

பூங்காவை சிறப்புற வடிவமைத்து நிர்மாணித்த கரம்நிறுவன இயக்குனர் திரு யசோ அவர்களுக்கான கௌரவப்பரிசினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் வழங்கி கௌரவித்தார்

அத்துடன் பூங்காவினை சிறப்புற அமைத்துக் கொடுத்த கரம் நிறுவன பொறியியலாளரான திரு பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு டொமினிக் பரிசில் வழங்கி கௌரவித்தார்.

தளபதி கிட்டு திரு உருவச் சிலையை உண்மைத் தோற்றமும் அவரது உணர்வுகளையும் வெளிப்படுத்தும் வகையில் திறம்பட உருவமைத்த ஓவியர், சிற்பக் கலைஞர் ரமணி தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளரால் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து இதனை அமைக்க உறுதுணையாக நின்ற ஏனைய நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கான பரிசில்களை திரு. டொமினிக் வழங்கினார்.

தாயகம் என்றே நீ கூறு' என்ற பாடல் நாதஸ்வரத்தில் ஒலிக்க ஊர்வலம் சென்றது-

நேற்று மாலை சம்பிரதாய பூர்வமாக, உணர்வெழுச்சியுடன் திறந்து வைக்கப்பட்ட கேணல் கிட்டு சிறுவர்பூங்கா வர்ண மின்விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது-

இந்த நிகழ்விற்கு ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் திரண்டு வந்து பூங்கா திறப்புவிழாநிகழ்விலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டனர்-

சிறுவர்கள் அலையலையாக திரண்டு வந்து பூங்காவை புதிய உற்சாகத்துடன் பார்வையிட்டனர்.

பூங்காப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட டாங்கி ஒன்று வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு இரு நிமிட நேரம் மௌன அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டு தமிழ்த்தாய் வணக்கப் பாடலுடன் பொதுக் கூட்டம் ஆரம்பமானது.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கூட்டத்திற்கு தலைமை வகித்தார். (தி)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகசபை செல்வபூரணம்

தையிட்டி காங்கேசன்துறையை சேர்ந்தவரும் தற்போது இடம்பெயர்ந்து காரைக்கால் இணுவில் கிழக்கில் வசித்து வந்தவருமான திருமதி கனகசபை செல்வபூரணம் காலமானார்.

அன்னார் சோதிமணி, சாந்தசோதி (சு. ப. நோ. கூ. ச.) தவசோதி, சிவசோதி, நவசோதி, ஜெயசோதி(ஆசிரியர்), சிவகுமார், காலஞ்சென்ற சண்முகசோதி ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரட்ணம், யோகேந்திரன், சிவசுப்பிரமணியம், இந்திராதேவி ஆகியோரது மாமியாருமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று காலை 10-00 மணிக்கு காரைக்கால் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ச. வசந்தன்

காரைக்கால்,
இணுவில் கிழக்கு, (சி-10095)